## பொது நிர்வாக, மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சு

**அரச உத்தியோகத்தர்களுக்கு உரியதாக நடாத்தப்படும் முறையான ஒழுக்காற்று விசாரணைகளின் போது, ஒழுக்காற்று விசாரணை உத்தியோகத்தர்களாகச் செயற்படுவதற்காக சட்டத்தரணிகளைப் பதிவு செய்தல்**

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் தாபனவிதிக்கோவையின் தொகுதி II இன் அத்தியாயம் XLVIII இன் உபபிரிவு 19:5 இல் குறிப்பிடப்பட்டுள்ள ஏற்பாடுகளின் பிரகாரம் சட்டத்தரணிகளைக் கொண்ட ஒழுக்காற்று விசாரணை உத்தியோகத்தர்களின் குழாத்திற்காக விண்ணப்பப்படிவங்கள் கோரப்படுகின்றன.

**தகைமைகள் :-**

01. சட்டத்தரணியொருவராக பத்து வருடங்களுக்கு மேற்பட்ட அனுபவத்தைக் கொண்டிருத்தல் மற்றும் 65 வயதிற்கு மேற்படாதிருத்தல்.

02. சட்டத்தரணி நற்பெயரைக் கொண்ட தொழில்சார் நிலையைக் கொண்டுள்ளார் என கௌரவ உயர் நீதிமன்றத்தினால் வழங்கப்படும் சான்றிதழ் (Letter of Good Standing) (விண்ணப்பப்படிவத்துடன் இணைப்பாக சமர்ப்பிக்கப்படல் வேண்டும்).

**கவனிக்கவும்:-**

(I) குழாத்திற்கு தெரிவு செய்வது அமைச்சின் செயலாளரினால் நியமிக்கப்படும் குழு மூலம் மேற்கொள்ளப்படுவதுடன், தாபனவிதிக்கோவையின் தொகுதி II இன் அத்தியாயம் XLVIII இன் 19:11, 19:12 மற்றும் 19:13 ஆகிய உபவிதிகளில் குறிப்பிடப்பட்டுள்ள ஏற்பாடுகளின் பிரகாரம் நீக்கங்கள் மேற்கொள்ளப்படும்.

(II) மேற்படி இலக்கம் 02 இல் குறிப்பிடப்பட்டுள்ள சான்றிதழானது 05 வருடங்களுக்கு ஒருமுறை மேலதிகக் கடிதத்துடன் ( இணைப்பு 02) சமர்ப்பிக்கப்படல் வேண்டும் என்பதுடன், அவ்வாறு செய்யத் தவறும் சட்டத்தரணிகள் அதனைச் சமர்ப்பிக்கும் வரை குழாத்திலிருந்து நீக்கம் செய்யப்படுவார்.

ஒழுக்காற்று விசாரணை உத்தியோகத்தர்களாகப் பதிவு செய்ய விருப்பம் தெரிவிக்கும் மேற்படி தகைமைகளைக் கொண்டுள்ள சட்டத்தரணிகள் மூலம் பொது நிர்வாக, மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சின் இணையத்தளமான www.pubad.gov.lk ஊடாகப் பெற்றுக்கொண்ட மாதிரிப்படிவத்தைச் சரியாகப் பூர்த்தி செய்து, பின்வரும் முகவரிக்கு அனுப்பி வைத்தல் வேண்டும்.

**தாபனப் பணிப்பாளர் நாயகம்,**
**பொது நிர்வாக, மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சு**
**சுதந்திர சதுக்கம்**
**கொழும்பு - 07**

விண்ணப்பப்படிவங்களை பரிசீலித்த பின்னர் தெரிவு செய்யப்படும் சட்டத்தரணிகள் ஒழுக்காற்று விசாரணை உத்தியோகத்தர்களின் பெயர்ப்பட்டியலில் உள்வாங்கப்படுவதுடன், ஒழுக்காற்று விசாரணைகளுக்காக மேற்கொள்ளப்படும் கொடுப்பனவுகள் 2025.10.24 ஆந் திகதிய அரசாங்க நிர்வாகச் சுற்றறிக்கை 27/2025 மூலம் தீர்மானிக்கப்படும்.

**எஸ். ஆலோகபண்டார**
**செயலாளர்**
**பொது நிர்வாக, மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சு**
**2026.02. 20**

**சுதந்திர சதுக்கம்**
**பொது நிர்வாக, மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சு**
**கொழும்பு -07**

இணைப்பு 01

**ஒழுக்காற்று விசாரணை உத்தியோகத்தர்களின் சட்டத்தரணிகள் குழாத்தில் இணைந்துகொள்வதற்கான விண்ணப்பப்படிவம்**

1. முதலெழுத்துக்களுடன் பெயர்:...........................................................................................
2. முதலெழுத்துக்களினால் குறிக்கப்படும் பெயர்:...........................................................................
3. தனிப்பட்ட முகவரி:.........................................................................................................
4. வசிக்கும் மாவட்டம்:.......................................................................................................
5. வசிக்கும் கிராம உத்தியோகத்தர் பிரிவு:.......................................................................
6. பிரதேச செயலகப் பிரிவு:.................................................................................................
7. தனிப்பட்ட தொலைபேசி இலக்கம்: வீடு- ................................ கையடக்க தொலைபேசி:............

   மின்னஞ்சல் முகவரி:..........................................................
8. பிறந்த திகதி:...................................................................................................................
9. தேசிய அடையாள அட்டை இலக்கம்:.................................................................................

   (நிழற்படப் பிரதியொன்றினை இணைத்து அனுப்பவும்.)
10. சட்டத்தரணியாக சத்தியப்பிரமாணம் செய்த ஆண்டு:...........................................................
11. பதிவு இலக்கம்:..............................................................................................................
12. ஒழுக்காற்று விசாரணைகளை நடத்தக்கூடிய மொழிமூலம்: சிங்களம்/தமிழ்/ஆங்கிலம்:.................
13. ஒழுக்காற்று விசாரணைகளை நடத்தக்கூடிய மாவட்டங்கள் /மாவட்டம்:....................................

    ..........................................................................................................................
14. கௌரவ உயர்நீதிமன்றத்தினால் வழங்கப்படும் சான்றிதழ் இணைக்கப்பட்டுள்ளது.

மேற்குறிப்பிட்ட தகவல்கள் சரியானவை என சான்றுரைப்படுத்துகின்றேன்.

நான் ஒழுக்காற்று விசாரணை உத்தியோகத்தராகத் தெரிவு செய்யப்படின், 1999 நவம்பர் 01 ஆம் திகதி முதல் நடைமுறைக்கு வரும் தாபனவிதிக்கோவையின் தொகுதி II இல் உள்ள நிபந்தனைகளின் பிரகாரம் மற்றும் அரசினால் அவ்வப்போது விதிக்கப்படும் நிபந்தனைகளின் பிரகாரம் செயற்படுவேன் எனவும் மற்றும் ஒழுக்காற்று விசாரணைகளை முடித்து தாமதமின்றி எனது அறிக்கையினை ஒழுக்காற்று விசாரணைக்குரிய அனைத்து ஆவணங்களுடன் உரிய ஒழுக்காற்று அதிகாரியிடம் ஒப்படைப்பேன் எனவும் உறுதியளிக்கின்றேன்.

..........................................................................

விண்ணப்பதாரியின் கையொப்பமும்

உத்தியோகபூர்வ முத்திரையும்

திகதி:-...................................

இணைப்பு 02

............................................

............................................

............................................

............................................

............................................

............................................

திகதி -:.................................

செயலாளர்
பொது நிர்வாக, மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சு
சுதந்திர சதுக்கம்
கொழும்பு - 07.

**<u>ஒழுக்காற்று விசாரணை உத்தியோகத்தர்களின் சட்டத்தரணிகள் குழாத்தின் உறுப்புரிமையை இற்றைப்படுத்தல்</u>**

.............................................................. ஆகிய நான், ஒழுக்காற்று விசாரணை உத்தியோகத்தராக ....................................... ஆந் திகதிய அரசாங்க நிர்வாகச் சுற்றறிக்கை ................................. இன் தொடரிலக்கம் .................................... இன் கீழ் பதிவு செய்யப்பட்டுள்ளதுடன், நற்தொழில்சார் நிலையைக் கொண்டுள்ளேன் என கௌரவ உயர் நீதிமன்றத்தினால் வழங்கப்படும் சான்றிதழை இத்துடன் சமர்ப்பிக்கின்றேன்.

..........................................................................

கையொப்பம் மற்றும் உத்தியோகபூர்வ முத்திரை